தினமணி

# இது ஏழைகளின் பட்ஜெட் அல்ல...

எஸ். குருமூர்த்தி

First Published : 07 Mar 2011 01:40:52 AM IST

செலவு அதிகரித்திருக்கிறது, என்றாலும் நிதிப் பற்றாக்குறையை 5.5 சதவீதத்திலிருந்து 5.1 சதவீதமாகக் குறைத்திருக்கிறேன்' என்று நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தனது பட்ஜெட் உரையின்போது மார்தட்டிக் கொண்டார். நிதிநிலை அறிக்கையைப் படித்த அனைவருமே, நிதிப்பற்றாக்குறைத் தொகை ரூ.20 ஆயிரம் கோடி அளவுக்கு அதிகரித்திருக்கிறதே, பிறகு எப்படி நிதிப்பற்றாக்குறை வீதம் மட்டும் குறைந்து போனது எனக் குழம்பிப் போனார்கள்.

பட்ஜெட்டை விமர்சிக்கும் எதிர்க்கட்சியினர்கூட பிரணாப் காட்டிய மாயாஜாலத்தில் மயங்கிப் போனார்கள். இது எப்படிச் சாத்தியம் என்று அவர்கள் ஒருவரும் கேள்வி எழுப்பவில்லை. உண்மையில், பற்றாக்குறை வீதத்தைக் குறைப்பதற்கு பிரணாப் எதுவுமே செய்யவில்லை. பிறகு எப்படி நிதிப்பற்றாக்குறை குறைந்தது என்றுதானே கேட்கிறீர்கள்? இந்த அதிசயத்தை நிகழ்த்தியது சாட்சாத் பணவீக்கம்தான் என்பதை உன்னிப்பாகக் கவனித்தால் தெரியும்.

2010-11 நிதியாண்டுக்கான பட்ஜெட் உரையில் நிதிப் பற்றாக்குறை ரூ.3.81 லட்சம் கோடி என்று மதிப்பிட்டார் நிதியமைச்சர். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பான (ஜிடிபி) ரூ.69.35 லட்சம் கோடியில் 5.5 சதவீதம். அதன் பிறகு பணவீக்கம் படுவேகமாக உயர்ந்தது. பொருள்களின் விலைகள் விண்ணைத் தொட்டன. புதிய விலைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (நாமினல் ஜிடிபி) ரூ. 69.35 லட்சம் கோடியிலிருந்து ரூ.78.78 லட்சம் கோடியாக அதிகரித்தது. இந்த ரூ.9.43 லட்சம் கோடி உயர்வு முழுக்க முழுக்க பணவீக்கத்தால் மட்டுமே. எந்த விதமான கூடுதல் உற்பத்தியும் இல்லாமல் உற்பத்தி மதிப்பு மட்டும் அதிகரித்ததன் விளைவுதான் பற்றாக்குறை விகிதம் குறைந்துவிட்டதுபோன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

பணவீக்கத்தைப் பொறுத்து அதிகரித்துக் காட்டப்பட்ட ரூ. 78.78 லட்சம் கோடியில் தற்போதைய பட்ஜெட்டில் மதிப்பிடப்படும் பற்றாக்குறையான ரூ.4 லட்சம் கோடி என்பது 5.1 சதவீதம். இதைத்தான் பற்றாக்குறை வீதம் குறைந்திருக்கிறது என்று பிரணாப் கூறியிருக்கிறார். பணவீக்கம் உயராமல் இருந்திருந்தால், ரூ.69.35 லட்சம் கோடி உண்மையான உள்நாட்டு உற்பத்தியில் பற்றாக்குறை மதிப்பு 5.8 சதவீதமாக உயர்ந்திருக்கும். கண்டிப்பாக 5.5 சதவீதத்திலிருந்து 5.1 சதவீதமாகக் குறைந்திருக்காது. இடைக்கால நிதிக் கொள்கை அறிக்கையில்

இந்த உண்மை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதிகரித்துக் காட்டப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பினால்தான் பற்றாக்குறை வீதம் குறைந்திருக்கிறது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

உண்மையான ஜிடிபி மதிப்புக்கும் இப்போதைய விலைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் ஜிடிபி மதிப்புக்கும் இடையேயான வேறுபாடுதான் பணவீக்கம். 2005-06-ம் நிதியாண்டிலிருந்து இந்த இடைவெளி அதிகரித்துக்கொண்டேதான் வந்திருக்கிறது. 2005-06-ல் இந்த வேறுபாடு 9.4 சதவீதமாக இருந்தது. 2006-07-ல் 16.9 சதவீதமாக உயர்ந்தது. 2008-09-ல் 21.8 சதவீதமாகவும், 2009-10-ல் 31.3 சதவீதமாகவும் அதிகரித்தது. இதுவரை இல்லாத அளவுக்கு 2010-11-ல் இந்த மதிப்பு 38 சதவீதமாக உயர்ந்திருக்கிறது.

ஒருவேளை, உண்மையான, பெயரளவிலான ஜிடிபி மதிப்புகளுக்கு இடையேயான வேறுபாடு கடந்த 2005-06-க்குப் பிறகு உயராமல் இருந்திருந்தால், 2010-11-ம் ஆண்டில் பற்றாக்குறை 21 சதவீதமாக இருந்திருக்கும். 2009-10 அளவிலேயே தொடர்ந்திருந்தால்கூட 2010-11-ல் பற்றாக்குறை 7.5 சதவீதமாக இருந்திருக்கும். எப்போது பணவீக்கம் மிக அதிகமாக இருக்கிறதோ அப்போது, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், நிதிப்பற்றாக்குறைக்கும் இடையேயான விகிதத்தைக் கணக்கிடுவதில் அர்த்தமேயில்லை.

2005-06-ல் இருந்து பணவீக்கத்தின் காரணமாக பெயரளவிலான ஜிடிபி மதிப்பு அதிகரித்துக்கொண்டே சென்றாலும், அந்த அளவுக்கு மறைமுக வரி வருவாய் உயரவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். அதனால், பற்றாக்குறையையும் பெயரளவிலான ஜிடிபியையும் ஒப்பிடுவதே தவறாகிறது.

இந்தப் பட்ஜெட்டில் வருவாய்க்கான வழிகள் அதிகரிக்கப்படவில்லை என்று நிதியமைச்சரே ஒப்புக்கொண்டிருக்கிறார். பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கூடுதல் வரி ஏதும் விதிக்காமலேயே பற்றாக்குறையைச் சமாளித்திருக்கிறார் என்று ஊடகங்கள் அவரைப் புகழ்ந்து தள்ளுகின்றன. உண்மை என்னவென்றால், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, எங்கெல்லாம் நியாயமாக வரி வசூலிக்க முடியுமோ அங்கெல்லாம் வரி வசூலிப்பதை நிறுத்திவிட்டது.

2005-06-ல் உண்மையான ஜிடிபி மதிப்பில் இருந்த உற்பத்தி வரி வசூலின் பங்கு, 2010-11-ல் பாதியாகக் குறைந்திருக்கிறது. இப்போதைய விலையில் கணக்கிடப்படும் ஜிடிபி மதிப்பிலும் இது இன்னும் குறைவுதான்.

2005-06-லிருந்து ஜிடிபி மதிப்பில் உற்பத்தி வரியின் பங்கு 3 சதவீதமாக இருந்ததாகவும் இது 2010-11-ம் ஆண்டில் 1.5 சதவீதமாகக் குறைந்துவிட்டதாகவும் 2010-11-ம் ஆண்டுக்கான இந்தியப் பொருளாதார ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2005-06-ம் ஆண்டில் வசூலித்ததைவிட 2010-11-ம் நிதியாண்டில் உற்பத்தி வரி ரூ.1 லட்சம் கோடி குறைவாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. சுங்கவரி ரூ.43 ஆயிரம் கோடி குறைந்திருக்கிறது. ஆக, ரூ.1.43 லட்சம் கோடி வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. 2006-07-ம்

ஆண்டில் ரூ.13 ஆயிரம் கோடியும், 2008-09ல் ரூ.63 ஆயிரம் கோடியும், 2009-10-ல் ரூ.81 ஆயிரம் கோடியும் வரிக்குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது.

2007-08-ம் ஆண்டில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்காக உற்பத்தி வரியில் ரூ.59 ஆயிரம் கோடியும், சுங்க வரியில் ரூ.41 ஆயிரம் கோடியும் சலுகை வழங்கப்பட்டது. அதைக் கழித்துப் பார்த்தாலும் 2010-11-ம் ஆண்டில் ரூ.1 லட்சம் கோடிதான் வரிக்குறைப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இந்த நிதியாண்டில் ரூ.1.43 லட்சம் கோடி குறைவான வரி வசூல் செய்யப்பட்டிருக்கிறது.

நியாயமாக வசூலிக்க வேண்டிய வரியைக்கூட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு வசூலிக்க மறுக்கிறது என்பதுதான் இதன் பொருள். இவ்வளவு வரிக்குறைப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டாலும், பணவீக்கம் என்னவோ அதிகரித்துக்கொண்டேதான் செல்கிறது. இப்போது திடீரென 2007-08-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட வரிக்குறைப்பு நடவடிக்கைகளை ரத்து செய்தால், பணவீக்கம் மேலும் உயரக்கூடுமோ என்கிற அச்சம் வேறு அரசை ஆட்டிப் படைக்கிறது.

வரிகள் குறைக்கப்படும் அளவுக்குப் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் ஒன்றும் நெருக்கடியில் இருக்கவில்லை. அந்த நிறுவனங்களின் லாபக் கணக்கைப் பார்த்தாலே இது புரியும். பெரும்பாலான நிறுவனங்கள் கொள்ளை லாபம் அடைந்திருக்கின்றன. வரிவிதிப்புக்கு முந்தைய நிலையில் நிறுவனங்களின் லாபம் 2005-06-ல் ரூ.4.08 லட்சம் கோடியாகவும், 2007-08-ல் ரூ.7.11 லட்சம் கோடியாகவும், பொருளாதார மந்த நிலை ஏற்பட்ட 2008-09-ல் ரூ. 6.68 லட்சம் கோடியாகவும்,2009-10-ல் ரூ.8.24 லட்சம் கோடியாகவும் இருந்தது.

2008-09-ம் நிதியாண்டைக் காட்டிலும் 2009-10-ல் நிறுவனங்களுக்கு 23.35 சதவீதம் அதிக லாபம் கிடைத்திருக்கிறது. வளர்ச்சியை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக வழங்கப்பட்ட வரிச் சலுகைகள் பொதுமக்களைச் சென்றடையவில்லை என்பதையே இந்தக் கொள்ளை லாபங்கள் நமக்குக் காட்டுகின்றன. அதனால், இன்னமும் வரிச்சலுகைகளைத் தொடர்ந்து கொண்டிருப்பதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான சலுகைகள் இத்துடன் முடியவில்லை. வரிவிலக்கு என்பது ஒருபுறம் இருக்க, சட்டப்படியான வரிவிகிதத்தைவிடக் குறைவான அளவிலேயே இவை வரி செலுத்துகின்றன. 2005-06-ல் இருந்தே கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான வரிச் சலுகை அதிகரித்துக் கொண்டே சென்றிருக்கிறது.

2005-06-ல் 50 சதவீதமாக இருந்த சலுகை அளவு 2010-11-ல் 72 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. 2010-11-ம் ஆண்டில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான வரிச்சலுகை மட்டும் ரூ.5.12 லட்சம் கோடியாகும். இதுதவிர, வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட வரிவிலக்கு ரூ.1 லட்சம் கோடி, வரிக்குறைப்பு ரூ.43 ஆயிரம் கோடி. இதனால், சிறிய நிறுவனங்களைக் காட்டிலும்

பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் குறைந்த அளவு வரி மட்டும் செலுத்தி தப்பித்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு இந்த அளவுக்குச் சலுகை அளிக்கப்பட்டு வரும் நிலையில், நாட்டில் 58 சதவீதம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வேளாண்மை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் மொத்த மூலதன மதிப்பீட்டில் விவசாயம், 2005-06-ம் ஆண்டிலிருந்து வெறும் 7.5 சதவீத அளவில் எவ்வித வளர்ச்சியுமில்லாமல் தேங்கியிருப்பதாக இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. வேளாண்துறை பிழைக்க வேண்டுமானால், பெருமளவு முதலீடு செய்யப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கை பரிந்துரைத்திருக்கிறது.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகையில் ஒரு சிறு பகுதி மட்டுமே வேளாண்மையின் சீரான வளர்ச்சிக்குப் போதுமானது. ஆனால், அதற்கான எந்த நடவடிக்கையும் பட்ஜெட்டில் அறிவிக்கப்படவில்லை. அப்படியிருந்தும் இதை சாமான்ய மக்களுக்கான பட்ஜெட் என்று கூறிக்கொள்கிறார்கள்.

வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணத்தை மீட்பதற்கான நடவடிக்கைகளுக்கும் பட்ஜெட் உரையில் பிரணாப் முகர்ஜி அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை. ஜனவரி 25-ம் தேதி செய்தியாளர்களிடம் எதைச் சொன்னாரோ அதையே தனது பட்ஜெட் உரையில் மீண்டும் ஒருமுறை கூறினார். சம்பிரதாயத்துக்காக ஊழல் பற்றியும் பேசினார்.

கடந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட 66 திட்டங்களில் வெறும் 25 திட்டங்கள் மட்டுமே நிறைவடைந்திருப்பதாக அவரே ஒப்புக்கொண்டார். மற்றவையெல்லாம் காகிதத்தில்தான் இருக்கின்றனபோலும். மிக முக்கியமான இந்த அம்சத்தை ஊடகங்களும் கண்டுகொள்ளவில்லை.

இந்தப் பட்ஜெட்டில் சில நல்ல அம்சங்களும் இருப்பதை மறுக்க முடியாது. ஆனால், அவற்றை மட்டுமே ஊதிப் பெரிதாக்கி மக்கள் நலனுக்கான பட்ஜெட் இது என்பதுபோன்ற ஒரு மாயத்தோற்றத்தை ஊடகங்கள் ஏற்படுத்திவிட்டன. உண்மையில், இது ஏழைகளுக்கான பட்ஜெட் அல்ல, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான நிதிநிலை அறிக்கை.

இதனால் பயன்பட இருப்பது சாமானிய இந்தியக் குடிமக்களோ, சிறு தொழில் முனைவோரோ, விவசாயிகளோ, மாத வருமானம் பெறும் ஊழியர்களோ அல்ல. பன்னாட்டு நிறுவனங்களான கார்ப்பரேட் நிறுவனங்கள்!

**எலுமிச்சை விலை உயர்ந்தது!**

First Published : 07 Mar 2011 02:39:46 AM IST

அரக்கோணம், மார்ச் 6: எலுமிச்சை விலை உயர்ந்துள்ளது. சென்னை, வேலூர் மாவட்டம் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டத்திலிருந்து எலுமிச்சை பழங்கள் லாரிகள், ரயில்களில் கொண்டு வரப்படுகின்றன.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக எலுமிச்சை வரத்து மிகவும் குறைந்துள்ளது. இதனால், அதன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கோடைக்காலத்தில் விலை உயர்வது சகஜம் என்றாலும், ஒரு பழம் விலை ரூ. 5-க்கு விற்பனையாவது இதுவே முதல்முறை எனக் கூறப்படுகிறது.

இதுகுறித்து எலுமிச்சை வியாபாரிகள் கூறியது: ஆந்திர மாநிலத்தில் ஆயிரம் எலுமிச்சை கொண்ட மூட்டை ஒன்று ரூ. 2,500 முதல் ரூ. 2,900 வரை விற்கப்படுகிறது. போக்குவரத்து செலவு, முகவர்கள் கமிஷன் உள்ளிட்டவற்றால், தமிழகத்தில் கூடுதல் விலைக்கு விற்கப்படும். ஆந்திர மாநிலத்தில் கோடைக்காலம் முன்கூட்டியே தொடங்கிவிட்டதால், எலுமிச்சை விளைச்சல் குறைந்து உள்ளது. தமிழகத்தில் தேவை அதிகரித்துள்ளது. இதுவே விலை உயர்வுக்கு காரணம் என்றனர்.

**"உவர்நிலத்தை பல்வகை பயிர் சாகுபடிக்கு மாற்றிய விவசாயி'**

First Published : 07 Mar 2011 12:10:16 AM IST



நிலத்தில், தண்ணீர் பாய்ச்சும் விவசாயி வீரமணி.

கடலூர், மார்ச் 6: கடலூர் அருகே சுனாமியால் பாதிக்கப்பட்ட நிலத்தை பண்படுத்தி, பல்வகைப் பயிர்கள் சாகுபடி செய்யும் நிலமாக மாற்றி இருக்கிறார், கண்டக்காடு விவசாயி வீரமணி.

÷2004 டிசம்பர் 26-ல் கடலூர் மாவட்டத்தின் கடலோரக் கிராமங்கள் பெரும்பாலானவை சுனாமியால் பாதிக்கப்பட்டன.

÷2 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் கடல் நீர் தேங்கி, வடிவதற்கு பல நாள்கள் ஆயின. இதனால் நல்ல விளைநிலங்கள் எல்லாம் உவர் நிலமாக மாறிவிட்டன. இவற்றை நல்ல விளை நிலங்களாக மாற்ற அரசும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

÷கண்டக்காடு விவசாயி வீரமணியின் 10 ஏக்கர் நிலங்கள், சுனாமியால் உவர் நிலங்களாக மாறின.

÷தோட்டக்கலைப் பயிருக்கு ஏற்ற இந்த நிலங்களில், ஜிப்சம் உள்ளிட்ட ரசாயனங்களை கலந்து, 2 ஆண்டுகளில் அந்த நிலங்களை, அனைத்து பயிர்களையும் சாகுபடி செய்யும் நிலமாக மாற்றி இருக்கிறார் அவர். இந்த நிலத்தில் நிலத்தடி நீர், 20 முதல் 25 அடி ஆழத்தில் தற்போது கிடைக்கிறது.

÷அதை பயன்படுத்தி தற்போது, சிறுகீரை, முளைக்கீரை, அரைக்கீரை, பொன்னாங்கண்ணிக்கீரை, செம்பட்டிக் கத்தரிக்காய், கத்தரி நாற்று, முட்லூர் வெங்காயம், வெங்காய விதை உள்ளிட்ட பயிர்களை செய்து வருகிறார், வீரமணி.

÷கீரை வகைகள் அன்றாடச் செலவுக்கும் மற்ற பயிர்கள், நல்ல லாபம் தருபவைகளாகவும் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

÷இது பற்றி வீரமணி கூறியது: சுனாமி பாதித்த நிலத்தை 2 ஆண்டுகளில் வளமான நிலமாக மாற்றி விட்டேன். அனைத்து கீரை வகைகளையும் பயிரிடுகிறேன். கடலூர் பகுதி வியாபாரிகளே அனைத்தையும் வாங்கிக் கொள்கிறார்கள்.

÷வெங்காய விதை உற்பத்தி விவசாயம் லாபகரமாக உள்ளது. ஏக்கருக்கு 150 கிலோ முதல், 175 கிலோ வரை வெங்காய விதை கிடைக்கும். ÷வெங்காய விதை விலை கிலோ ரூ. 1,500 வரை உள்ளது. கடலூர் மாவட்ட வெங்காய விவசாயிகளும் தாராபுரம், உடுமலைப்பேட்டை, தலைவாசல், தேனி பகுதி விவசாயிகளும் வந்து வாங்கிச் சென்று விடுகிறார்கள். அதேபோல் கத்தரி நாற்று தயாரித்தும் விற்பனை செய்கிறேன். 30 நாள்களில் ஏக்கருக்கு ரூ. 2,500 முதல் ரூ. 3 ஆயிரம் வரை வருவாய் கிடைக்கிறது. எனது நிலத்தில் கத்தரித் தோட்டங்களும், வெங்காயத் தோட்டங்களும் அமைத்து இருக்கிறேன்.

÷கத்தரிச் சாகுபடியில், ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 2 லட்சம் வரை லாபம் கிடைக்கும். களையெடுத்தல் போன்ற விவசாய வேலைகளுக்கு குறைந்த ஆள்களை மட்டும் வைத்துக் கொண்டு, நீர் பாய்ச்சுதல் உள்ளிட்ட பல்வேறு வேலைகளையும் நானே செய்கிறேன்.

÷எங்கள் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம், 20 முதல் 25 அடி ஆழத்தில் உள்ளது. நீர் இறைக்க, 5 குதிரைத் திறன் கொண்ட, இரு மோட்டார்களைப் பயன்படுத்துகிறேன் என்றார் வீரமணி.

÷பகல் நேரத்தில் 2 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. அற்கு ஏற்றபடி, நீர்ப் பாசனத்தை மாற்றிக் கொள்கிறோம். எனது விவசாயத்துக்கு இரவில் மின்சாரம் தேவையில்லை. ÷அதனால் மின் வெட்டால் பாதிப்பு இல்லை என்றும் வீரமணி தெரிவித்தார்.

**தில்லி வேளாண் கண்காட்சியில் மக்களைக் கவர்ந்த 5 அடி சுரைக்காய்; 10 கிலோ முட்டைக்கோஸ்**

First Published : 06 Mar 2011 03:22:56 AM IST

புது தில்லி, மார்ச் 5: இந்த ஆண்டு தில்லியில் நடந்து முடிந்துள்ள வேளாண் கண்காட்சியில் 5 அடி நீளமுள்ள சுரைக்காயும், 10 கிலோ எடையுள்ள முட்டைக்கோஸும் மக்களைக் கவரும் காய்கறிகளாக இருந்தன.

தில்லியில் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (ஐஏஆர்ஐ) சார்பில் மெகா வேளாண் கண்காட்சி நடைபெற்றது. இது கடந்த வியாழக்கிழமை தொடங்கி சனிக்கிழமை வரை 3 நாள்கள் நடைபெற்றது. இதில் நாடு முழுவதும் இருந்து விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விவசாயப் பொருள்களை பொதுமக்களின் பார்வைக்கு வைத்திருந்தனர். நாடு முழுவதும் உள்ள ஐஏஆர்ஐ நிறுவனத்தின் ஆராய்ச்சி அலுவலகங்கள் கண்டுபிடித்திருந்த புதிய ரக காய், கனிகளும் இடம்பெற்றன.

தவிர, புதிய தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நவீன ரக விவசாயக் கருவிகளும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இதை மக்கள் ஆர்வமுடன் பார்த்துச் சென்றனர்.

கண்காட்சியில் சுமார் 200 கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. இதில் பல்வேறு ரக காய், கனிகள் இடம்பெற்றிருந்தாலும் அவை அனைத்துமே மக்களை கவர்ந்திடவில்லை.

ஹரியாணா விவசாயி கபூர் சிங் உற்பத்தி செய்த 5 அடி 6 அங்குலம் நீளமுள்ள சுரைக்காய், ஐஏஆர்ஐ சார்பில் உற்பத்தி செய்யப்பட்ட 10 கிலோ எடையுள்ள முட்டைக்கோஸ், வெள்ளை நிற கத்திரிக்காய், கோடைக்காலத்தில் சாப்பிடும் பூசணி இன கனி ஆகியவையே மக்களை வெகுவாகக் கவர்ந்தன.

கபூர் சிங், நீளமான சுரைக்காய்களை தனது கடையில் அழகாகத் தொங்கவிட்டிருந்தார். இதை மக்கள் வரிசையில் நின்று காத்திருந்து பார்த்து வியந்தனர். சுரைக்காயின் சிறப்பு குறித்து அவரிடம் ஆச்சர்யமாகக் கேட்டறிந்தனர்.

தனது கடைக்கு வந்த ஒவ்வொருவரிடமும், "இந்த 5 அடி நீளமுள்ள சுரைக்காயை 5 மாதகாலமாக குழந்தையைப் போல் வளர்த்தேன்' என்று அவர் கூறத் தவறியதில்லை. சுரைக்காய் செடிக்கு ரசாயன உரத்தை பயன்படுத்தவில்லை என்றும் பசுவின் சாணத்தை மட்டுமே இட்டதாகவும் கூறி இயற்கை உரத்தை பயன்படுத்தியதில் அவர் பெருமிதம் அடைந்தார்.

கண்காட்சிக்கு வந்த மக்களிடம் புதிய ரக வெள்ளைக் கத்திரிக்காய், பூசணி வகை கனி ஆகியவற்றின் சிறப்பம்சம் குறித்து ஐஏஆர்ஐ அலுவலர்கள் விளக்கினர். வெள்ளைக் கத்திரிக்காய் மருத்துவக் குணம் கொண்டது என்றும், அதை பயிரிடுவதன் அவசியம் குறித்தும் கூறினர்.

சீனா, ஸ்வீடன் உள்ளிட்ட நாடுகளில் விளையும் காய்கறிகளை இந்தியாவில் பயிரிடுவதற்கான கள சோதனை நடைபெறுகிறது. இது முடிவடைந்ததும் வெளிநாட்டு காய்கறிகள் வளர்வதற்கான காலநிலை குறித்து விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்றும் ஐஏஆர்ஐ அலுவலர்கள் குறிப்பிட்டனர்.

**மஞ்சள் சாமந்தி விலை வீழ்ச்சி**

First Published : 06 Mar 2011 02:36:50 AM IST



திருத்தணி அடுத்துள்ள சத்திரெஞ்சயபுரம் கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள சாமந்திப் பூக்கள். (கீழ்படம்) காமராஜர் மார்க்கெட் பகுதி கடையொன்றில் விற்பனைக்கு வ

திருத்தணி, மார்ச் 5: திருத்தணி பகுதியில் மஞ்சள் சாமந்தி பூக்கள் உற்பத்தி அதிகரிப்பால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

÷திருத்தணியை அடுத்துள்ள அருங்குளம், சத்திரெஞ்சயபுரம், வினாயகபுரம், ராமகிருஷ்ணாபுரம் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சாமந்தி பூக்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

÷மேலும் கத்தரி, வெண்டை, மிளகாய், பாகற்காய், கொய்யா உள்ளிட்ட பயிர்களும், பூக்களில் மல்லிகை ஆகியவை ஆர்வமுடன் பயிர் செய்து வந்தனர்.

÷அதுபோல் தும்பிகுளம், தாழவேடு ஆகிய பகுதியில் 2 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் சாமந்தி ஆகிய பூக்களும் விவசாயிகள் பயிரிடத் தொடங்கியுள்ளனர். தும்பிகுளம் கிராம பகுதியில் இருந்து கலர் சாமந்தி, சாமந்தி, திருத்தணிக்கு வந்து கொண்டிருந்தது.÷தற்போது திருத்தணி சுற்றுப்புற கிராமங்களில் இருந்து மஞ்சள் சாமந்தி விற்பனைக்கு வருவதால் ஒரு கிலோ 10-ஆக விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

÷இது குறித்து ராமகிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த எஸ்.கே. சுப்பிரமணியம் கூறுகையில் "தற்போது விவசாய கூலிக்கு ஆள்கள் பற்றாக்குறை காரணமாக தோட்டப் பயிர்களை அதிகமாக பயிரிட்டு வருகிறோம்.

÷ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் செடிகள் முதல் 6 ஆயிரம் செடிகள் நடவேண்டும்.÷செடிக்கு ஒரு கிலோ பூக்கள் அளவில் பூக்கும். 45 நாள்கள் வரை உற்பத்தியிருக்கும். தற்போது ஒரு கிலோ ரூ.10 முதல் ரூ.12 வரை விற்பனையாகிறது.

÷ஆனால் சென்ற ஆண்டு ஒரு கிலோ 25 முதல் 30 வரை விற்பனையானது' என்றார் அவர்.

**உளுந்து பயிருக்கு மானிய விலையில் உரம் கிடைப்பதில் தாமதம்**

First Published : 06 Mar 2011 02:34:28 AM IST



கடலூர், மார்ச் 5: உளுந்து பயிருக்கு மானிய விலையில் டி.ஏ.பி. உரம் விநியோகிப்பதில் வேளாண் துறை காலதாமதம் செய்ததால், விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்து உள்ளனர்.

÷கடலூர் மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரிநீரால் பாசன வசதி பெறும் டெல்டா பகுதியாகும்.

÷கடலூர் டெல்டா பாசனப் பகுதிகளில் இந்த ஆண்டு 1.42 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்பட்டது. டெல்டா பாசனப் பகுதிகளில் நெல் அறுவடைக்கு 10 தினங்களுக்கு முன், உளுந்து ஊடுபயிராக விதைப்பது பாரம்பரியமாக நடந்து வரும் விவசாயம்.

÷நஞ்சை நிலத்தில் உள்ள ஈரப்பதம், பனியினால் காற்றில் இருந்து வரும் ஈரப்பதம் ஆகியவற்றைப் பயன்படுத்தி, உளுந்து 90 நாள்களில் அறுவடைக்கு வந்து விடும்.

÷இது டெல்டா விவசாயிகளுக்கு செலவில்லாமல் வருவாய் கிடைக்கும் விவசாயமாகக் கருதப்படுகிறது.

÷கடலூர் மாவட்ட டெல்டா பாசனப் பகுதிகளில் (காட்டுமன்னார்கோவில், குமராட்சி, பரங்கிப்பேட்டை, கீரப்பாளையம், புவனகிரி ஒன்றியங்கள்) இந்த ஆண்டு காவிரிநீரை விடுவிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக, 70 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே உளுந்து சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

÷விருத்தாசலம் வட்டத்தில் 1,000 ஏக்கரில் இறவை உளுந்து, சிறப்புத் திட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

÷டெல்டா பாசனப் பகுதிகளில் உளுந்துப் பயிர், வடவாறு பாசனப் பகுதிகளில் 60 நாள் பயிராகவும், வடக்குராஜன் வாய்க்கால் பாசனப் பகுதிகளில் 55 நாள் பயிராகவும், வீராணம் ஏரி பாசனப் பகுதிகளில் 50 நாள் பயிராகவும் உள்ளது.

÷உளுந்துக்கு 30-வது நாளிலும் 60-வது நாளிலும் டி.ஏ.பி. உரத்தை (டை அம்மோனியம் பாஸ்பேட்) நீரில் கரைத்து செடிகளில், தெளிப்பான்கள் மூலம் தெளிக்கப்படுகிறது. இதனால் பூக்கள் உதிராமலும், காய்கள் திரட்சியாகவும் மகசூல் அதிகமாகவும் இருக்கும் என்று விவசாயிகள் கூறுகிறார்கள்.

÷எனவே 50 சதவீதம் மானிய விலையில் ஏக்கருக்கு ஒரு மூட்டை வீதம் டி.ஏ.பி. உரம் கடந்த 20 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. மூட்டை ரூ. 500 விலையில் உள்ள டி.ஏ.பி. உரம் மானிய விலையில் ரூ. 250-க்கு வழங்க வேண்டும்.

÷ஆனால் இந்த ஆண்டு டெல்டா பாசனப் பகுதிகளில் உளுந்து பயிர் 50 முதல் 60 நாள் பயிராகி விட்ட நிலையில் இதுவரை மானிய விலையில், டி.ஏ.பி. உரம் வழங்கப்பட வில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

÷இது குறித்து மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், "டெல்டா பாசனப் பகுதிகளில் தற்போது உளுந்து 50 முதல் 60 நாள் பயிராக உள்ளது.

÷ஆனால் பயிரில் தெளிப்பதற்கான, மானிய விலை டி.ஏ.பி. உரம் இன்னும் வழங்கப் படவில்லை. ஆனால் விவசாயிகள் தங்கள் சொந்த செலவில் உரம் வாங்கி தெளித்து வருகிறார்கள்.

÷விவசாயிகளுககுத் தேவையான 500 டன் டி.ஏ.பி. உரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பு உள்ளது. ஆனால் அதை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை, வேளாண் துறை மேற்கொள்ளாததால் இச்சலுகையை விவசாயிகள் பெறமுடியவில்லை.

÷இனிமேல் வழங்கினால் அதனால் பயன் இல்லை. விவசாயிகளுக்கு மானியம் வழங்க மத்திய மாநில அரசுகள் கோடிக்கணக்கில் நிதி வழங்குகிறது. அதைப் பெற்றுத் தருவதில் வேளாண் அலுலர்கள் அக்கறை காட்டுவது இல்லை.÷கடலூர் மாவட்டத்தில் 13 வட்டாரங்களுக்கான 13 உதவி இயக்குநர் பணியிடங்களில், 7 காலியாக உள்ளன. அவற்றில் கீழ்நிலை வேளாண் அலுவலர்கள் பொறுப்பு அலுவலர்களாக உள்ளனர் என்றார்.

÷இது குறித்து வேளாண் அலுவலர்களை விசாரித்தபோது கிடைத்த பதில்: உளுந்து பயிருக்கு 35-வது நாளிலும், 45-வது நாளிலும் டி.ஏ.பி. உரம் கரைசல் தெளிக்க வேண்டும். ÷கடலூர் மாவட்டத்தில் டி.ஏ.பி. உரம், 50 சதவீதம் மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. தேவையான உரம் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களிலும் இருப்பு உள்ளது.

÷பரங்கிப்பட்டை வட்டாரத்தில் சனிக்கிழமை முதல் டி.ஏ.பி. உரம் வழங்கப்படுகிறது. குமராட்சி, காட்டுமன்னார்கோவில் வட்டாரங்களில் திங்கள்கிழமை முதல் வழங்கப்படும் என்று தெரிவித்தனர்.

**ஏலக்காய் விவசாயிகள் கவனத்திற்கு...**

First Published : 06 Mar 2011 12:52:57 PM IST

கூடலூர், மார்ச் 5: ஏலக்காய் விவசாயிகள் கவனத்திற்கு ஸ்பைசஸ் போர்டு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

ஸ்பைசஸ் போர்டு ஏலக்காய் விவசாயிகளுக்கு உற்பத்தியை அதிகரிப்பதற்கு மானியத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மானியத் திட்டங்களை நேரடியாக பெற வயநாடு கல்பட்டாவிலுள்ள கள அலுவலகம் மூலம் செயல்படுத்தி வருகிறது.

மானியம் பெற்று தருவதாக ஏஜெண்டுகள் எனக்கூறி விவசாயிகளிடம் மோசடி செய்து வருவதாக தெரியவந்துள்ளது. மானியத் திட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுவதற்கும், கள ஆய்வு மேற்கொள்வதற்கும் மற்றும மானியம் பெற்று தருவதற்கும் ஸ்பைசஸ் போர்டு எந்த இடைத் தரகர்களையும் நியமிக்கவில்லை.

விவசாயிகளின் அனைத்து தேவைகளுக்கும் கல்பட்டா ஸ்பைசஸ் போர்டு கள அலுவலக தொலைபேசி எண் : 04936-202605 என்ற எண்ணையும், மண்டல அலுவல தொலைபேசி எண்: 04936-205680 என்ற எண்ணையும், கொச்சியிலுள்ள இயக்குநர்(வளர்ச்சி) அலுவலக தொலைபேசி எண்:0484-2340965 மற்றும் 2339942 ஆகிய எண்களை தொடர்பு கொண்டு தகவல்களை கேட்டறியலாம் என்று உதவி இயக்குநர் அலுவலகம் அறிவித்துள்ளது.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 06 Mar 2011 01:35:38 PM IST

செய்யாறு, மார்ச் 5: ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது (படம்).

செய்யாறு வட்டம், இரும்பந்தாங்கல் கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், வேளாண்மை உதவி இயக்குநர்கள் ஏ.எம்.சாந்தி, ஜி.பாணடியன் ஆகியோர் விளக்கம் அளித்தனர். அப்போது இராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறை குறித்தும் அவர்கள் பேசினர்.

இதைத் தொடர்ந்து, தீமை தரும் பூச்சிகள், நன்மை தரும் பூச்சிகள் குறித்து நேரிடையாக நெல் வயலில் அடையாளம் காட்டி உதவி வேளாண்மை அலுவலர்கள் பாலமுருகன், பாதுஷா ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**நெல் கொள்முதல் நிலையத்தை முற்றுகையிட்ட விவசாயிகள்**

First Published : 06 Mar 2011 02:25:07 PM IST

விருத்தாசலம், மார்ச் 5: விருத்தாசலத்தை அடுத்த ஆலிச்சிக்குடி கிராமத்தில் உள்ள அரசு நேரடி கொள்முதல் நிலையத்தை விவசாயிகள் சனிக்கிழமை முற்றுகையிட்டனர்.

÷ஆலிச்சிக்குடி கிராமத்தில் தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கு சார்பில் நேரடி கொள்முதல் நிலையம் இயங்கி வருகிறது. இந்நிலையில் மார்ச் 3-ம் தேதி இரவு கிடங்கின் பட்டியில் எழுத்தர் (பொறுப்பு அலுவலர்) முத்துக்குமார் மற்றும் ஊழியர்கள் நெல் மூட்டைகளை அளந்து கொண்டிருந்தனர்.

÷அப்போது அளவையில் சந்தேகமடைந்த விவசாயிகள், அளந்த நெல் மூட்டைகளை வேறு அளவை இயந்திரத்தில் வைத்து அளந்தனர். அப்போது 1 மூட்டைக்கு 5 முதல் 8 கிலோ வரை திருடப்பட்டது தெரியவந்ததுள்ளது.

÷பின்னர் 4-ம் தேதி பட்டியல் எழுத்தரிடம் விவசாயிகள் 8 கிலோவுக்கு உரிய பணம் கேட்டுள்ளனர். அதற்கு பட்டியல் எழுத்தர் 3 கிலோவுக்கு உரிய பணம் வழங்குவதாகக் கூறியதாகவும், ஆனால் விவசாயிகள் 7 கிலோவுக்கு பணம் வழங்க வேண்டும் எனக் கேட்டதாகவும் தெரிகிறது.

÷பட்டியல் எழுத்தர் முத்துக்குமார் பணம் வாங்கிக் கொண்டு மாலை வருவதாகக் கூறி சென்றுள்ளார். ஆனால் அவர் மீண்டும் வரவில்லை.

÷பின்னர் இது குறித்து தகவலறிந்த சிதம்பரம் நுகர்பொருள் வாணிபக் கழகக் கண்காணிப்பாளர் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

÷இதில் 1 மூட்டைக்கு 5 முதல் 8 கிலோ வரை திருடப்பட்டது உறுதி செய்யப்பட்டது. இது குறித்து அதிகாரிகளிடம் பேசி சனிக்கிழமை (மார்ச் 5-ம் தேதி) முடிவெடுக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

÷இதற்கு விவசாயிகள் எழுத்துமூலமாக கேட்டுள்ளனர். அதிகாரிகள் சனிக்கிழமை வருவதாகக் எழுதிக் கொடுத்துள்ளனர்.

÷இதைத் தொடர்ந்து 5-ம் தேதி முற்பகல் வரை எந்த அதிகாரிகளும் வராததால் விவசாயிகள் கொள்முதல் நிலையத்தை முற்றுகையிட்டனர். பின்னர் பிற்பகலில் வாணிபக் கழக துணை மேலாளர் வில்சன் மோகன்தாஸ், உதவி மேலாளர் ராஜசேகரன் உள்ளிட்ட அதிகாரிகள் ஆலிச்சிக்குடி சென்று விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

÷அப்போது நெல் அளவை இயந்திரங்களை ஆய்வு செய்ததில் நெல் திருடப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

÷விவசாயிகள் தாங்கள் இதுவரை கடந்த ஜனவரி 19-ம் தேதி முதல் நெல் கொள்முதல் செய்து வருகிறோம். எங்களுக்கு அன்று முதல் இழப்பு தொகை வழங்க வேண்டும் என தெரிவித்தனர்.

÷ஆனால் துணை மேலாளர் இது குறித்து மண்டல மேலாளரிடம் தெரிவித்திருப்பதாகக் கூறினார். மேலும் தொடர்புடைய பட்டியல் எழுத்தர் முத்துக்குமார், அவருடன் இருந்த ஊழியர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்படும் என தெரிவித்தனர்.

÷ஆனால் விவசாயிகள் இதற்கு உடன்படாமல் முற்றுகைப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு, இன்று (மார்ச் 6-ம் தேதி) வேறுகட்ட போராட்டங்கள் நடத்துவதாக அறிவித்துள்ளனர்.

தினமலர்

**சந்தைக்கு வராத தக்காளி வியாபாரிகள் நேரடி கொள்முதல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,01:28 IST

மேட்டூர்: ஒரு கிலோ, 2 ரூபாயாக விலை வீழ்ச்சியடைந்ததால், விரக்தியடைந்த மேச்சேரி விவசாயிகள் தக்காளியை சந்தைக்கு எடுத்து செல்வதில்லை. அதனால், வியாபாரிகளே நேரில் சென்று விவசாயிகளிடம் தக்காளி கொள்முதல் செய்கின்றனர்.சேலம் மாவட்டத்தில், மேச்சேரி பகுதியில்தான் தக்காளி அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மேச்சேரி சுற்றுப்பகுதியில் இறவையில், 116 ஹெக்டேரிலும், மானாவாரியில், 2, 204 ஹெக்டேரிலும் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது.கடந்த ஜனவரியில் ஒரு கிலோ தக்காளி, 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. மேச்சேரியில், பொங்கல் சமயத்தில், 400 ரூபாயாக இருந்த 13 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ஜனவரி இறுதியில், 200 ரூபாயாக விலை வீழ்ச்சியடைந்தது.தற்போது, மேச்சேரி சுற்றுப்பகுதியில் தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளது. அதனால், ஒரு கிலோ தக்காளி 2 ரூபாயாக விலை வீழ்ச்சியடைந்துள்ளது.தக்காளிவிலை வீழ்ச்சியடைந்ததாலும், போக்குவரத்து செலவு அதிகமாக இருப்பதாலும், விவசாயிகள் கடந்த ஒருவாரமாக தக்காளியை சந்தைக்கு கொண்டு செல்வதில்லை. பழங்களை அறுவடை செய்து நிலத்தில் அருகாமையில் குவித்து வைத்து விடுகின்றனர். வியாபாரிகள் சாகுபடி நிலங்களுக்கு நேரடியாக சென்று தக்காளியை கொள்முதல் செய்கின்றனர்.மேலும், கூலியாட்களை வைத்து தக்காளி அறுவடை செய்யும்

பட்சத்தில் நஷ்டம் ஏற்படும் என்பதால், விவசாயிகள் குடும்ப உறுப்பினர்களை கொண்டே தக்காளி அறுவடை செய்கின்றனர்.

**பருத்தி, மஞ்சள் ஏலத்தில் ரூ.2.35 கோடிக்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,01:24 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி மற்றும் மஞ்சள் ஏலத்தில், 2.35 கோடி ரூபாய்க்கு விற்பனை நடந்தது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், டி.சி.ஹெச்., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக, 8,409 ரூபாய்க்கும், குறைந்தபட்சம் 8,182 ரூபாய்க்கும், பி.டி., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சம், 6,809 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 6,189 ரூபாய்க்கும் விற்பனையானது. நேற்று, 8,000 பருத்தி மூட்டைகள், 2.15 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரம் நடந்த பருத்தி ஏலத்தை விட, குவிண்டாலுக்கு, 300 ரூபாய் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக 12 ஆயிரத்து 999 ரூபாய்க்கும், குறைந்த பட்சமாக 11 ஆயிரத்து 600 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக, 12 ஆயிரத்து 600 ரூபாய்க்கும், குறைந்த பட்டசமாக, 10 ஆயிரத்து 500 ரூபாய்க்கும், பனங்காலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக, 19 ஆயிரத்து 969 ரூபாய்க்கும், குறைந்த பட்சமாக, 16 ஆயிரத்து 689 ரூபாய்க்கும் விற்பனையானது. மொத்தம், 300 மூட்டைகள் கொண்ட மஞ்சள், 20 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

**கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,01:33 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் மொரப்பூர், பாலக்கோடு, அரூர் ஆகிய யூனியனுக்குட்பட்ட உர கடைகளில் நிர்ணயித்த விலையை விட, கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுவதாக, விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் நடப்பு ஆண்டு, இரண்டாயிரம் ஹெக்டேரில் உணவுப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுள்ளது. பணப்பயிர்கள் ஐந்தாயிரம் ஹெக்டேருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் அந்தந்த வட்டார வேளாண்மை மையம் மற்றும் தனியார் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் குறிப்பிட்ட காலத்துக்குள் பயிர்களுக்கு தேவையான உரங்களை இடவேண்டும். இந்நிலையில்

பதிவு செய்த உரக்கடைகள் அந்த பதிவில் கூடுதல் கிளைகளை திறந்துள்ளது. இக்கடைகளில் விவசாயிகளுக்கு விற்கும் உரங்களின் ஆரம்ப விலையை விட, 12 சதவீதம் அதிகமாக விற்கப்படுகிறது. அதனால், விவசாயிகள் அதிக விலைகொடுத்து உரத்தேவையை சமாளிக்க வேண்டியுள்ள நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.மேலும், இக்கடைகளில் உரங்களுக்கு உரிய ரசீது வழங்குவதில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். உரக்கட்டுப்பாடு சட்ட விதிகளை வேளாண் துறை ஆய்வு செய்தும், விலையை தனியார் உரக்கடைகள் குறைக்காமல் உள்ளது. இக்கடைகளில் வேளாண் தரக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் திடீர் ஆய்வு நடத்தி கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்களை கட்டுப்படுத்த வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

**நுண்ணிய நீர் பாசன திட்டம் வேளாண் துறை அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,01:33 IST

தர்மபுரி: நீர் நிலை ஆதாரம் குறைந்துவரும் நிலையில், விவசாயத்துக்கு நுண்ணிய நீர் பாசன திட்டத்தை பயன்படுத்துமாறு வேண்மை துறை அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து வேளாண்துறை வெளியிட்ட அறிக்கை: பயிர் சாகுபடிக்கு முக்கிய காரணியாக உள்ள தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தும் வழிமுறைகளை கடைபிடித்தால் அதிக மகசூல் பெறலாம். நுண்ணிய நீர் பாசன முறைகளான சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனத்தின் மூலம் நீரை வீணாக்காமல் பயன்படுத்த முடியும். வாரம் ஒரு முறை தண்ணீருடன் உரத்தை சேர்த்து நீர் பாய்ச்சினால், பயிர் வளர்ச்சியை அதிகப்படுத்தி இரட்டிப்பு மகசூல் பெறலாம். விவசாய கூலி பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை உள்ளது. அதிலிருந்து தப்பிக்க, பயிர்களை வரிசையாகவும், போதிய இடவெளியில் பயிரிட்டு, வேளாண் கருவிகளை பயன்படுத்த வேண்டும். உழவர் விவாதக்குழுவில் இடம்பெற்றுள்ள விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை கடைபிடப்பதோடு, தங்கள் பகுதி மற்ற விவசாயிகளுக்கு எடுத்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். செம்மை நெல் மற்றும் செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த சந்தேகங்களை, அப்பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை மையத்தில் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கரூர் விதை பரிசோதனை மையத்தில் திடீர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,01:36 IST

கரூர்: ""விதை பரிசோதனை ஆய்வகம் மூலம் நடப்பாண்டில் 91,500 மாதிரி விதை ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.'' என விதை சான்று இணை இயக்குனர் கந்தசாமி கூறினார். கரூர் விதைப்பரிசோதனை ஆய்வகம் செயல்பாடு ஆய்வு செய்த கோவை விதைச்சான்று இணை

இயக்குனர் கந்தசாமி கூறியதாவது: விவசாயத்தில் மிக முக்கியமான இடுபொருள் விதையாகும். விதையின் தரத்தை விதைக்கும் முன் விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். தற்போது தமிழகத்தில் விதை சான்றளிப்பு துறை கட்டுப்பாட்டில் 29 சதவீத பரிசோதனை ஆய்வகம் செயல்படுகிறது. இந்த ஆய்வகங்கள் மூலம் நடப்பாண்டில் 91,500 விதை மாதிரிகள் ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கரூர் காந்திகிராமம் திண்ணப்பா நகரில் செயல்படும் விதைப் பரிசோதனை மாதிரிகள் ஆய்வு செய்யப்படும் முறைகளையும், பதிவேடுகளையும் ஆய்வு செய்யப்பட்டது. வந்துள்ள விதை மாதிரிகள் மிக துல்லியமாக ஆய்வு செய்யப்பட்டு, அதன் முடிவுகள் பணி விதை மாதிரி அனுப்பியவருக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார். ஆய்வகத்தின் மூத்த வேளாண்மை அலுவலர் வெங்கராமன், விதைச்சான்று உதவி இயக்குனர் கைலாசபதி உடனிருந்தனர். விதை மாதிரிகளை விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், ஆய்வகத்துக்கு அனுப்பி பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டது.

**மஞ்சள் அறுவடை பணி தீவிரம் விளைச்சல் குறைவு; விலை சரிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,01:03 IST

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் மஞ்சள் அறுவடை பணி தீவிரமாக நடந்து வருகிறது. விளைச்சலும் குறைந்து, விலையும் சரிந்ததால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். சத்தி பகுதியில் நடப்பாண்டில் 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் மஞ்சள் பயிரிட்டனர். மஞ்சள் நடவு செய்யப்பட்டு, கிழங்கு பிடிக்கும் சமயத்தில் பெய்த தொடர் மழை காரணமாக, மஞ்சள் பயிர் வேர் அழுகல் நோயால் பாதிக்கப்பட்டது. சங்கு புழுவும் மஞ்சளை பதம் பார்த்தது. இதன் காரணமாக மஞ்சள் விளைச்சல் பாதியாக குறைந்தது. சில இடங்களில் மஞ்சளுக்கு சருகு நோய் தாக்கியதால் கிழங்கு பெரிதாகாமல் சிறுத்து போனது. மஞ்சள் விளைச்சல் பாதிக்கப்பட்டது. சில மாதங்களுக்கு முன் ஒரு குவிண்டால் மஞ்சள் 16 ஆயிரம் ரூபாய் வரை விற்றது. தற்போது, குவிண்டால் 12 ஆயிரம் முதல் 14 ஆயிரம் ரூபாய் வரை மஞ்சளின் தரத்தை பொறுத்து விற்பனையாகிறது. மஞ்சள் விவசாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர். சென்றாண்டு மஞ்சள் நல்ல விலைக்கு விற்றதால் நடப்பாண்டில் மஞ்சள் பயிரிடும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. விலை குறைவால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.

**தமிழகத்தில் ஆவின் பால் உற்பத்தி சரிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,01:25 IST

மதுரை:தமிழகத்தில் ஆவின் பால் உற்பத்தி சரிந்து வருவதால் தனியார் பால் விற்பனை அதிகரித்துள்ளது.கூட்டுறவு பால் உற்பத்தி சங்கங்கள் மூலம் மதுரை, திருச்சி, சென்னை உள்ளிட்ட ஆவின் பண்ணைகளுக்கு பால் சப்ளை செய்யப்படுகிறது. மதுரை ஆவினில் சில ஆண்டுகளுக்கு முன் தினமும் மூன்று லட்சம் லிட்டர் பால் பாக்கெட்டுகள் நுகர்வோருக்கு வழங்கப்பட்டன. ஆவின் பால் தரமாக இருந்ததால், பால் விற்பனை அதிகரித்தது. மாவட்டம் தோறும் தினமும் சராசரியாக 70 ஆயிரம் லிட்டர் வரை பற்றாக்குறை நிலவியது.கறவை மாடுகள் எங்கே?: பற்றாக்குறையை சமாளிக்க ஆவின் சார்பில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 852 கறவை மாடுகளை வாங்கி பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டன. இரண்டு ஆண்டுக்கு முன் மாவட்டம் தோறும் சராசரியாக 23 பால் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டன. எனினும், எதிர்பார்த்தபடி பால் உற்பத்தி நடக்கவில்லை. சென்னை, மதுரை உட்பட பல்வேறு மாவட்டங்களிலும் இதே நிலை நீடித்து வருகிறது.

கறவை மாடுகளை பலர் முறையாக பராமரிக்கவில்லை. பால் உற்பத்தி மையங்கள் சிலவற்றில் முறைகேடுகள் நடந்தன. இதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் சிலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பால் உற்பத்தியை பெருக்கவும் எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை கண்டறியவும், கறவை மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் பால் உற்பத்தி சரிந்தது.50 சதவீத உற்பத்தி குறைந்தது: மதுரை ஆவினில் தற்போது ஒரு லட்சத்து 50 ஆயிரம் லிட்டர் உற்பத்தி செய்யப்படுகிறது. சென்னைக்கு மதுரையில் இருந்து தினமும் 30 ஆயிரம் லிட்டர் பால் அனுப்பப்படுகிறது. இதனால் தற்போது அட்டை வைத்திருப்போருக்கு மட்டும் பால் வழங்கப்படுகிறது. பற்றாக்குறையை சமாளிக்க ஆவின் பூத் ஏஜென்ட்டுகள் சிலர் தனியார் பால் பாக்கெட்டுகளை வாங்கி விற்பனை செய்யும் அளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது. ஒரு லிட்டர் ஆவின் பால் 22 ரூபாய். தனியார் பால் ஒரு லிட்டர் 26 ரூபாய் முதல் 28 ரூபாய் வரை விற்கப்படுகிறது. எனினும், கூடுதல் விலை கொடுத்தாவது தனியார் பால் பாக்கெட்டை வாங்க வேண்டிய கட்டாயம் நுகர்வோருக்கு ஏற்பட்டுள்ளது. ஆவின் உற்பத்தி குறைவால் தனியார் பால் விற்பனை அதிகரித்துள்ளது.

**தென்னை விவசாயிகளுக்குதோட்டக்கலை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,01:31 IST

கொட்டாம்பட்டி:கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் தென்னை விவசாயிகள் நல வாரியத்தில் உறுப்பினராவதற்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுகின்றன.தோட்டக்கலை உதவி இயக்குனர் வெங்கடேஸ்வரி கூறியதாவது: உறுப்பினராக சேர விரும்புவோர் விண்ணப்பங்களை தோட்டக்கலை அலுவலகம் அல்லது தங்கள் பகுதி உதவி விவசாய அலுவலர் அலுவலகத்தை அணுகி பெறலாம். 500 மரங்கள் வரை வைத்திருப்போர் 100 ரூபாய், 501 முதல் 1000 மரங்களுக்கு 200 ரூபாய், 1001 மரங்களுக்கு மேல் 500 ரூபாய் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சந்தா செலுத்த வேண்டும்.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், சந்தா மற்றும் இரு பாஸ்போர்ட் போட்டோவுடன் இம்மாத இறுதிக்குள் உதவி இயக்குனர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும், என்றார்.

**நெல்சாகுபடிபயிற்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,00:08 IST

நான்குநேரி:நான்குநேரி வேளாண் அலுவலகத்தில் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் நெல்சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது.நான்குநேரி டவுன் பஞ்., தலைவர் சங்கரன் தலைமை வகித்தார். நீர்பாசன சங்க தலைவர் முத்துடையார் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் முருகேஷ், வேளாண்மை அலுவலர் மனோகரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் பாலகிருஷ்ணன், ஆர்.பாலகிருஷ்ணன் பேசினர்.உதவி வேளாண்மை அலுவலர் சுவாமிநாதன் நன்றி கூறினார்.

**மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி வெளியீட்டுவிழா**

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2011,00:38 IST

கோவில்பட்டி:கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி வெளியீட்டு விழா நடந்தது.தமிகத்தில் கடந்த 2008ம் ஆண்டு முதல் பப்பாளியில் மாவுப்பூச்சி உருவாகி உழவர்களுக்கு பெரும் பிரச்னைகளை கொடுத்து வருகிறது. பப்பாளியில் உருவான மாவுப்பூச்சி மல்பெரி, மரவள்ளி, காட்டாமணக்கு, காய்கறி பயிர்கள், பழமரங்கள், பருத்தி, மலைத்தோட்ட பயிர்கள், நறுமணப்பயிர்கள், மலர்கள் என 55 வகையான பயிர்களை தாக்கி பெருத்த சேதத்தை ஏற்படுத்தி வந்தது. இந்நிலையில் தூத்துக்குடி மாவட்டத்திலும் இப்பூச்சியின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

கோடையில் நிலவும் அதிக வெப்பநிலை இதற்கு சாதகமாக அமையும் என்பதால் மாவுப்பூச்சிகளின் எண்ணிக்கை பெருக வாய்ப்புள்ளது. மேலும் பூச்சிக்கொல்லி மருந்துகளால் கட்டுப்படுத்த முடியாத மாவுப்பூச்சிகளை ஒழிக்க, இயற்கை எதிர் பூச்சிகளை கொண்டு அழிக்கும் உயிரியல் ஒட்டுண்ணி திட்டத்தை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் துவங்கியுள்ளது. இதில் கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் அசிரோபேகஸ் பப்பாயே என்ற ஒட்டுண்ணியை வெளியிடும் விழா நடந்தது. கோவில்பட்டி அருகேயுள்ள எப்போதும் வென்றான் கிராமத்தை சேர்ந்த முத்துராமலிங்கம் என்பவரது தோட்டத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் ஜவகர் தலைமை வகித்தார். தூத்துக்குடி மாவட்ட கலெக்டரின் வேளாண்மை நேர்முக உதவியாளர் முன்னிலை வகித்தார். தொடர்ந்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஜோசப் கருணாநிதி கலந்து கொண்டு ஒட்டுண்ணியை வெளியிட்டு பேசினார். மேலும் மாவுப்பூச்சிகள் குறித்தும், ஒட்டுண்ணிகளின் பயன்பாடுகள் குறித்தும் பலர் பேசினர். விழாவில் வேளாண்மை துணை மற்றும் உதவி இயக்குநர்கள், ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை பூச்சியியல் துறை பேராசிரியர் ராமமூர்த்தி மற்றும் உதவி பேராசிரியர்கள் ராம்குமார், ஆனந்தி ஆகியோர் செய்திருந்தனர்.

**விளை நிலங்களில் தஞ்சமாகும்வன விலங்குகள்: விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,22:09 IST

தாண்டிக்குடி:வனப்பகுதியை விடுத்து விவசாய நிலங்களில் தஞ்சமாகும் வன விலங்குகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.தாண்டிக்குடி மலைப்பகுதியில் காட்டெருமை, மான், பன்றி இவற்றின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது துவங்கியுள்ள கோடை காலத்தில் சுட்டெரிக்கும் வெயிலால் வனப்பகுதியில் மேய்ச்சல் புற்கள் கருகியும், நீர்நிலைகள் வறண்டும் காணப்படுகிறது. இதையடுத்து மாலை நேரத்திற்கு பின் வனப்பகுதியிலிருந்து அருகிலிருக்கும் விவசாய நிலங்களில் வனவிலங்குகள் தஞ்சமடைகின்றன. தற்போது பயிரிடப்பட்டுள்ள குறுவிவசாயப் பயிர்களான பீன்ஸ், அவரை, சவ்சவ், முட்டைகோஸ் மற்றும் மலை வாழை உள்ளிட்டவற்றை வனவிலங்குகள் மேய்ச்சல் செய்து சேதப்படுத்தி தாழ்வான நீர்நிலை பகுதிகளில் முகாமிடுகிறது. இப்பகுதி விவசாயிகள் இரவில் இவற்றை கட்டுபடுத்த காவலில் ஈடுபட்டு பயிர்களை காக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

மேலும் வனத்துறை மூலம் அமைக்கப்பட்ட சோலார் மின் வேலியும் பயனற்று வன விலங்குகளை கட்டுபடுத்த முடியாத நிலையில் கீழ்மலை பகுதி விவசாயிகள் வெகுவாக

பாதிக்கப்பட்டுள்ளனர்.வன விலங்கு தாக்குதலிருந்து மலை விவசாயம் செய்வது எட்டக் கனியாகவும், உயிரை பணயம் வைத்து பயிர்களை காக்கும் நிலை தொடர்வதால் மலைப்பகுதியில் விவசாய செய்வோரின் எண்ணிக்கை குறைந்து விவசாய பரப்பு குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் அதிகரித்துள்ள வன விலங்குகளை கட்டுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கறவை மாடுகளுக்கு மடிநோய் கால்நடைத் துறை ஆலோசனை**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,22:19 IST

பெரியகுளம்: கோடை காலத்தில் கறவை மாடுகளுக்கு மடிநோய் வராமல் பாதுகாக்க, கால்நடை மருத்துவத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது. மாவட்டத்தில் பெரியகுளம், ஆண்டிபட்டி, கம்பம், தேனி, உத்தமபாளையம், போடி, பகுதிகளில், விவசாயம் சார்ந்த தொழிலாக கறவைமாடு வளர்க்கின்றனர். மாவட்டத்தில் 10 ஆயிரம் கறவை மாடுகள் உள்ளன. இவற்றில் கிடைக்கும் பால் உற்பத்தி பல குடும்பங்கங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமாக உள்ளது. கோடை காலத்தில் கறவை மாடுகளுக்கு மடிநோய் தாக்கம் ஏற்படுவதுண்டு. மாட்டின் மடியிலுள்ள திசுக்கள் பாதிப்படைந்து மடி வீக்கமாகவும், சில காம்புகளில் பால் வராமல் இருப்பதும் மடிநோய் தாக்கத்தின் அறிகுறிகள். மாட்டு கொட்டகைகளின் அசுத்தமான சூழ்நிலையால் நோய்க்கிருமிகள் வளர்ச்சியடைகின்றன.

அதிகம் பால் கொடுக்கும் கலப்பின கறவை மாடுகளை நோய் எளிதில் தாக்கும். எனவே பால் கறக்கும் போது மடியிலிருந்து பாலை முழுவதுமாகக் கறந்து விட வேண்டும். மடியில் பால் தங்கினால் எளிதில் மடிநோய் தாக்கும் நிலை உள்ளது. சுகாதாரமான பராமரிப்பு முறைகளால் நோய் தாக்கத்தை 70 சதவீதம் தடுத்துவிடலாம். மாட்டுத்தொழுவம் சுத்தமானதாகவும், சாணம், சிறுநீர் தேங்காமல் இருக்க வேண்டும். பால் கறப்பதற்கு முன் சுத்தமான நீரால் மடுவை கழுவ வேண்டும். பின் பொட்டாஷியம் பெர்மாங்கனேட் கடுகளவு கலந்த ஒரு லிட்டர் நீரில் மடியைக் கழுவ வேண்டும். சுத்தமான துணியால் மடியில் உள்ள ஈரத்தை அகற்ற வேண்டும். பால் கறப்பவரின் கையில் நகங்கள் இருக்க கூடாது என கூறப்பட்டுள்ளது.

**அறுவடை நாள் விழா**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,22:27 IST

அருப்புக்கோட்டை:முத்துராமலிங்கபுரத்தில், வேளாண் அறிவியல் நிலையம் சார்பாக, நீர்வள நிலவள திட்டத்தின் கீழ், அறுவடை நாள் வயல் விழா நடந்தது.வேளாண் உதவி பேராசிரியர் ராதிகா, நெல் சாகுபடியில் உயர் விளைச்சல் ரகங்கள் தேர்வு, சரியான விதை அளவு, களை, உரம்,

நீர், நோய் மற்றும் பூச்சி மேலாண்மை முறைகளை கடைபிடித்தால் அதிக மகசூல் பெறலாம் என விளக்கினார். இணை ஆராய்ச்சியாளர் பிரேமா மற்றும் அலுவலர்கள் ஏற்பாடு செய்தனர்.

**மஞ்சளை வேக வைத்து இருப்பு வைப்பது அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,01:01 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் விலை குறைவதால், விவசாயிகள் தங்கள் வீடுகளில் மஞ்சளை இருப்பு வைக்கத் துவங்கியுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் மைசூர் சம்பா, எட்டாம் நம்பர், 10ம் நெம்பர் உள்ளிட்ட மஞ்சள் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. காலிங்கராயன் பாளையம், மூலப்பாளையம் பகுதியில் பத்தாம் நம்பர் மஞ்சள் பயிர் அறுவடை நடக்கிறது. அறுவடை செய்யப்பட்டுள்ள மஞ்சளை வேக வைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகள் கூறியதாவது: ஒரு ஏக்கரில் மஞ்சள் பயிரிடுவதற்கு, நடவு கூலி, இரண்டு, மூன்று முறை மருந்து தெளிப்பது என, 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. அறுவடை கூலி தனியாக ஏக்கருக்கு 11 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. சென்றாண்டு அறுவடை கூலி 7,000 முதல் 8,000 ஆயிரம் ரூபாய் செலவானது. நடப்பாண்டு ஒரு கொப்பரை மஞ்சள் வேக வைக்க, 35 ரூபாய் கூலி தருகிறோம். நடப்பாண்டு இக்கூலியும் இரு மடங்காக உயர்ந்துள்ளது. சென்றாண்டு இறுதியில் மஞ்சள் ஒரு குவிண்டால் 17 ஆயிரத்து 500 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது, படிப்படியாக விலை குறைந்து புது மஞ்சள் 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விலை குறைவு காரணமாக அறுவடை செய்யப்படும் மஞ்சளை, வீடுகளில் இருப்பு வைக்க திட்டமிட்டுள்ளோம். நடப்பு ஆண்டு இறுதியில் விலை உயரும் பட்சத்தில், மார்க்கெட்டுக்கு கொண்டு செல்வோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பயிர் நிவாரணம் வழங்கிய வி.ஏ.,ஓ., மீது நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,00:23 IST

திருவாரூர்: திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தாலுக்கா பருத்திக்கோட்டை கிராமத்தில் பயிர் நிவாரணம் வழங்கப்பட்டதாக மன்னார்குடி தாசில்தார் முருகேசன் அளித்த தகவலின் பேரில் தேர்தல் விதிமுறைகளின் படி மாவட்ட தேர்தல் அதிகாரி பாஸ்கரன் அந்த வி.ஏ.ஓ., சாமிநாதன் மீது ஒழுங்கு நடவடிக்கைக்கு உத்தரவிட்டார். ஏற்கனவே இதே தாலுக்காவில் பாளையக்கோட்டை பரசபுரம் கிராமத்தில் வி.ஏ.ஓ., பன்னீர்செல்வம் மீதும் இலவச வேட்டி சேலை வழங்கிய குற்றத்துக்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் விதிமுறைகள்

அமலில் இருப்பதால் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**விதை கிராமத்திட்ட பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,00:23 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கத்தில் வேளாண் துறை சார்பில் விவசாயத்துக்கு தேவையான தரமான விதைகளை தாங்களே உற்பத்தி செய்துகொள்வது என்பது குறித்த விதை கிராமத்திட்ட இறுதிகட்ட பயிற்சி முகாம் நடந்தது. திருவாரூர் வேளாண் இணை இயக்குனர் ரகுநாதன் தலைமையில் பஞ்சாயத்து தலைவர்கள் ஆதிரெங்கம் முருகதாஸ், கட்டிமேடு இந்திரா ஆகியோர் தலைமையில் நடந்தது. வேளாண் துணை அலுவலர் தவமணி வரவேற்றார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் தலைமை வகித்து பேசியதாவது: விவாசாயிகள் தங்களுக்கு தேவையான விதைக்கு பிறரை சார்ந்து இல்லாமல் தாங்களே தயாரித்து கொள்ள வேண்டும். இப்பயிற்சி முகாமில் தொழில்நுட்பத்தை அறிந்து, புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இதில் மாநில திட்ட வேளாண்மை துணை இயக்குனர் கபிலன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ஞானசேகரன் ஆகியோர் பேசினர். விவசாயி விதை தேர்வு செய்வது எப்படி என்பது குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் நடேசன் பயிற்சி அளத்தார். வேளாண்துறை வேதாநாயகி, உதவி அலுவலர்கள் ஜோதி, கணேசன் பயிற்சியை நேரடியாக செய்து காண்பித்தனர். இதற்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் சுரேஷ்மார், சிவக்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

**நெல் கொள்முதல் நிலையத்தில் எடை மோசடி : விருத்தாசலம் அருகே விவசாயிகள் முற்றுகை**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,00:21 IST

விருத்தாசலம் : ஆலிச்சிக்குடி நெல் கொள்முதல் நிலையத்தில் எடை மோசடி நடந்ததை கண்டித்து, விவசாயிகள் முற்றுகை போராட்டம் நடத்தினர். விருத்தாசலம் அடுத்த ஆலிச்சிக்குடியில், தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வருகிறது. நிலைய பொறுப்பு அலுவலராக பட்டியல் எழுத்தர் (தற்காலிக ஊழியர்) முத்துகுமார் பணிபுரிந்து வருகிறார். கடந்த ஜன., 19ம் தேதி முதல் இந்நிலையத்தில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த 3ம் தேதி விவசாயிகளிடம் நெல் மூட்டை 41 கிலோ என, கொள்முதல் செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு எடையில் சந்தேகம் ஏற்பட்டதால்,

மாலையில் தனியார் எடை மிஷினை எடுத்து வந்து, கொள்முதல் செய்யப்பட்ட மூட்டைகளை எடை போட்டு பார்த்தனர். அப்போது, கொள்முதல் செய்யப்பட்ட மூட்டைகள் சராசரியாக 49 முதல் 52 கிலோ வரை எடை கூடுதலாக இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர். மூட்டைக்கு எட்டு கிலோ முதல் 10 கிலோ வரை மோசடி செய்யப்பட்டிருப்பதை அறிந்த விவசாயிகள், பொறுப்பு அலுவலரை முற்றுகையிட்டு மோசடி குறித்து கேட்டனர்.எடை மோசடியை ஒப்புக் கொண்ட பொறுப்பு அலுவலர் முத்துகுமார், மூட்டைக்கு 4 கிலோ வீதம் விவசாயிகளுக்கு பணத்தை மறுநாள்(4ம் தேதி) தருவதாக ஒப்புக் கொண்டார். ஆனால், 4ம் தேதி முத்துகுமார் கொள்முதல் நிலையத்திற்கு வராததால் ஆத்திரமடைந்த விவசாயிகள், நிலையத்தை முற்றுகையிட்டனர். சிதம்பரம் நெல் கொள்முதல் அலுவலர், விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது விவசாயிகள், கடந்த ஜன., 19ம் தேதியில் இருந்து எடை மோசடி நடந்திருப்பதால், அனைத்து மூட்டைக்கும் பணம் தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். 3ம் தேதி கொள்முதல் செய்யப்பட்ட மூட்டைக்கு மட்டும் தான் பணம் தர முடியும் என கூறிய கொள்முதல் அலுவலர், கண்காணிப்பாளருக்கு தகவல் கூறிவிட்டு சென்று விட்டார். தொடர்ந்து, சிதம்பரம் கண்காணிப்பாளர் விசாரணை நடத்தி ஆய்வு செய்தார். அப்போது, எடை மோசடி நடந்திருப்பது உண்மை என கண்டறியப்பட்டு 5ம் தேதி(நேற்று) காலை 10 மணிக்கு பட்டியல் எழுத்தர், சுமை தூக்கும் தொழிலாளர்களுடன் நேரில் வந்து பேசுவதாகக் கூறி விவசாயிகளிடம் எழுதி கொடுத்து விட்டுச் சென்றார். ஆனால், நேற்று காலை 12 மணி வரை கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் வராததால், ஆத்திரமடைந்த விவசாயிகள் மீண்டும் கொள்முதல் நிலையத்தை முற்றுகையிட்டனர். தொடர்ந்து நேற்று மதியம் சிதம்பரம் தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலைய துணை மேலாளர் வில்சன் மோகன்ராஜ் ஆலிச்சிக்குடி கிராமத்திற்கு வந்து நெல் மூட்டைகளை அளந்து விசாரித்து பின் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது விவசாயிகள் 16 ஆயிரம் மூட்டைக்கும் தொகையை தரவேண்டும் என கோரிக்கை வைத்தனர். ஆனால் கடந்த 3ம் தேதி கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளுக்கு மட்டும் பணம் தருவதாக துணை மேலாளர் வில்சன் மோகன்ராஜ் தெரிவித்தார். இதனை விவசாயிகள் ஏற்காமல் நாளை (இன்று) போராட்டம் நடத்துவது என முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து விவசாய விடுதலை முன்னணி வட்டார செயலர் ஜெயகாந்சிங் கூறுகையில், "கடந்த ஜனவரி மாதம் 19 ம் தேதியில் முதல் இதுவரை 16 ஆயிரம் நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மூட்டைக்கு 40 ரூபாய் என பார்த்தால் கூட இதுவரை 6 லட்சம் ரூபாய்க்கும் மேல் விவசாயிகளிடம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து உயர் அதிகாரிகள் விசாரணை

செய்து தவறு செய்தவர்களை தண்டித்து விவசாயிகளுக்கான பணத்தை தர நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

**உளுந்து செடிகளில் புழு தாக்குதல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,22:18 IST

செஞ்சி : வல்லம் ஒன்றியம் கொங்கரப்பட்டு கிராமத்தில் விவசாய நிலங்களில் பயிரிட்டிருந்த உளுந்து மற்றும் காராமணி செடிகள் புழு தாக்குதலால் பாதித்துள்ளன. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த வல்லம் ஒன்றியம் கொங்கரப்பட்டு கிராமத்தில் பல விவசாயிகள் 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் உளுந்து மற்றும் காராமணி செடிகள் பயிரிட்டுள்ளனர். இந்த செடிகளில் சில தினங்களாக புழு தாக்குதல் அதிகளவு உள்ளது. விவசாயிகள் மருந்து தெளித்தும் பயனில்லை. பூச்சி தாக்குதல் தொடர்பாக விவசாயி ஆனந்தராமன் கூறுகையில், ஒரு ஏக்கரில் உளுந்து பயிரிட செலவு 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் ரூபாய் வரை ஆகிறது. விளைச்சல் நன்றாக இருந்தால் சராசரியாக ஏக்கரில் 5 மூட்டை உளுந்து கிடைக்கும். ஒரு மூட்டை 6 ஆயிரம் வரை விலை போகும். ஆனால் பூச்சி தாக்குதல் இருப்பதால் 3 ஆயிரம் ரூபாய் கிடைப்பதே கடினம். பலரது நிலங்களில் பூச்சி தாக்குதல் உள்ளது என்றார். பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண்மைத்துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து, தகுந்த ஆலோசனைகளை வழங் கினால், விவசா யிகள் நஷ் டமடைவதை தடுக்கலாம்.

**வெண் பட்டு வளர்ப்பு விழிப்புணர்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,00:06 IST

ஓசூர்: ஓசூர் தமிழ்நாடு பட்டு வளர்ச்சிதுறை அலுவலகத்தில், கிரியா ஊக்கி திட்டத்தில் வெண்பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு புழு வளர்ப்பு விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. பாகலூர் உதவி ஆய்வாளர் கிருஷ்ணா வரவேற்றார். ஓசூர் அரசு பட்டு பயிற்சி நிலைய முதல்வர் வேணுகோபால் தலைமை வகித்து, தரமான இலை மகசூல், மண் பரிசோதனை அவசியம் குறித்தும், வெற்றி கரமான புழுவளர்ப்பு, புழுவளர்ப்பு மனை கட்டுவதற்கு அலுமினிய ஷீட்டுகள் பொருத்தும் தொழில்நுட்பம் குறித்தும் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார். ஓசூர் பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் சையத் மன்சூர், பட்டு விவசாயிகளுக்கு அரசு வழங்கும் மானிய விவரங்கள் குறித்து பேசினார். சமூக காடுகள் திட்ட வனச்சரகர் பழனிச்சாமி, மல்பரி மரம் நடவு மூலம் தரமான இலை உற்பத்தி செய்து லாபம் பெற வழிமுறைகள் குறித்து பேசினார். ஓசூர்

பாலிகிளினிக் பொறுப்பாளர் கண்ணன், ஊசி ஈ கட்டுப்படுத்த தேவையான தொழில்நுட்பத்தை எடுத்துரைத்தார். ஹூமாயூன் ஷெரீப், முருகேசன், ஆனந்தன், கண்ணாமணி, முருகன், ராமச்சந்திரன், ராமமூர்த்தி, ரவிச்சந்திரன், ஆனந்த்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**எண்ணெய் மார்க்கெட் சரிவால் தேங்காய் பருப்பு விலை கடும் சரிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,01:02 IST

கோபிசெட்டிபாளையம்: தேங்காய் எண்ணெய் விலை சரிவால், தேங்காய் பருப்பு விலை கடும் சரிவு ஏற்பட்டது. ஒரே வாரத்தில் ஒரு கிலோ 10 ரூபாய் வரை குறைந்தது. ஜனவரி மாதம் துவக்கத்தில் ஒரு கிலோ தேங்காய் பருப்பு 64 ரூபாயை தாண்டியது. தொடர்ந்து ஏற்பட்ட விலை உயர்வால் ஃபிப்ரவரி மாதம் 70 ரூபாயை எட்டியது. வெளிநாட்டில் இருந்து அதிகளவில் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. எண்ணெய் மார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய் விலை குறைய ஆரம்பித்தது. ஆலை அதிபர்களும் மூலப்பொருளான தேங்காய் பருப்பை அதிகளவில் கொள்முதல் செய்வதை தவிர்த்தனர். தேங்காய் பருப்பு விலை படிப்படியாக குறையத் துவங்கியது. கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நடப்பு வாரம் 90 மூட்டை தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோ 56 ரூபாய், குறைந்தபட்சமாக 50.81 ரூபாய், சராசரியாக 55.75 ரூபாய்க்கு விற்றது. சென்ற வாரத்தை விட, 150 மூட்டை குறைவாக வந்த நிலையிலும், விலை உயரவில்லை. சென்ற வாரத்தை விட 10.61 ரூபாய் விலை அதிரடியாக குறைந்தது. ஜனவரி 5ம் தேதி 64.06 ரூபாய், 12 ம் தேதி 59.07, 19ம் தேதி 62.26, 26ம் தேதி 63.67, ஃபிப்ரவரி மாதம் 2ம் தேதி 65.75, 9ம் தேதி 70.59 ரூபாயாக விலை உயர்ந்தது. ஆனால், 16ம் தேதி 66.76 ரூபாயாக இருந்த தேங்காய் பருப்பு 23ம் தேதி 66.61 ரூபாயாக குறைந்தது. நடப்பு வாரம் மேலும் 10 ரூபாய் வரை விலை குறைந்ததால், தேங்காய் பருப்பு உற்பத்தியாளர்கள் பெரும் கவலையில் உள்ளனர்.

எண்ணெய் மார்க்கெட்டில் 15 லிட்டர் கொண்ட தேங்காய் எண்ணெய் டின், நேற்று முன்தினம் 1,230 ரூபாயாக இருந்தது. நேற்று காலை 1,135 ரூபாயாக விலை குறைந்தது. எண்ணெய் விலை குறைந்து வருவதால், தேங்காய் பருப்பு கொள்முதலும் குறைந்து வருகிறது. இதனால் விலை அதிரடியாக குறைந்து விட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**வேளாண்துறைக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் : திட்டக்குழு உறுப்பினர் கஸ்தூரிரங்கன் தகவல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,00:35 IST

கோவை : ""உணவுத் தேவையை பூர்த்தி செய்ய, அறிவியல் சார் வேளாண்மை மூலம் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். 12ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்துறைக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேளாண் வளர்ச்சி அதிகரிக்கப்படும்," என திட்டக்குழு உறுப்பினர் கஸ்தூரிரங்கன் தெரிவித்தார். மத்திய திட்டக்குழு உறுப்பினர் கஸ்தூரிரங்கன் (அறிவியல்), ஆலோசகர் சதாம் அதே, இணை ஆலோசகர் வந்தனா திவேதி (வேளாண்மை) அடங்கிய குழுவினர் தமிழகத்தில் இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர். ஒருபகுதியாக கோவை வேளாண் பல்கலையில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், ஆய்வுகள் உள்ளிட்டவற்றை நேற்று பார்வையிட்டனர்.

இதுதொடர்பாக திட்டக்குழு உறுப்பினர் கஸ்தூரிரங்கன் நிருபர்களிடம் கூறியதாவது: வேளாண்துறையில் ஆராய்ச்சி மற்றும் கல்வி, விவசாயத்துறைகளில் உள்ள பிரச்னைகளை, கோவை வேளாண் பல்கலை எப்படி எதிர்கொள்கிறது என்பதை பற்றி பார்வையிட வந்துள்ளோம். வேளாண் பல்கலையின் மேம்பாட்டு திட்டங்களை ஆய்ந்து, அவற்றில் நாடு முழுவதும் விரிவாக்கத் தேவையான திட்டங்களை மற்ற மாநிலங்களிலும் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் வேளாண் உற்பத்தி எக்டருக்கு நான்கு டன்னாக உள்ளது; இந்தியாவில் இது 2 டன் மட்டுமே. உணவுப்பொருளுக்கான தேவை அதிகரித்து வரும் நிலையில், உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். வேளாண்துறையில் விவசாயிகள் மட்டுமின்றி, தொழில் முனைவோர்களுக்கும் அறிவியல் சார்ந்த முறைகள் கற்பிக்கப்பட வேண்டும்.

நாடுமுழுவதும் உள்ள வேளாண் பல்கலைகளுக்கு நிதி ஆதாரம் குறைவாக உள்ளது. ஊதியத்துக்காக மட்டும் 60 முதல் 80 சதவீதம் வரை நிதி செலவிடப்படுகிறது. 15 சதவீதம் வரை மட்டுமே ஆய்வுக்கு செலவிடப்படுகிறது. தனியார்-அரசு பங்களிப்புடன் அதிக திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். அதிக உரம், தண்ணீர், ஊட்டச்சத்துகள் பயன்படுத்தினால், அதிக மகசூல் கிடைக்கும் என இந்திய விவசாயிகள் தவறாக எண்ணுகின்றனர். இதனால் மண்வளம் பாதிக்கப்படுகிறது. மண்வளத்தை மீட்டு, குறைவான தண்ணீர், உரங்களைப் பயன்படுத்துவது பற்றிய அறிவை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். உணவுப்பாதுகாப்பை உறுதி செய்ய அறிவியல் ரீதியான வேளாண்மை முறை அவசியம்.

கோவை வேளாண் பல்கலை, விவசாயிகளுக்கு பிராந்திய மொழியில் பட்டப்படிப்பு வழங்குவது பாராட்டத்தக்கது. இயந்திர மயமாக்கலில் வேளாண்பல்கலை கவனம் செலுத்துகிறது. இந்திய உணவு வகைகளில் அரிசி பிரதான இடம் பிடித்துள்ளது; தேவையும் அதிகம். வேளாண் பல்கலையின் சீரிய நெல் சாகுபடித் திட்டத்தின் மூலம் எக்டருக்கு 10 டன் மகசூல் பெற முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, வேளாண்

தொடர்பான மேம்பாடுகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியாவில் 50 முதல் 60 சதவீதம் வரை மானாவாரி நிலங்கள் உள்ளன. வேளாண் பல்கலை தர்மபுரி மாவட்டத்தில் மானாவாரி மேம்பாடு திட்டத்தை செயல்படுத்துகிறது. பரீட்சார்த்த முறையில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தில், ஒரு ஏக்கரில் கத்தரிக்காய் மூலம் ஐந்து லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மகாராஷ்டிராவில், ஒரு ஏக்கர் மாதுளையில் இரண்டு லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
செம்மை நெல் சாகுபடி, துல்லிய பண்ணைத் திட்டம், மானாவாரி மேம்பாடு திட்டங்களை எப்படி நாடுமுழுவதும் விரிவு செய்வதற்கான சாத்தியங்களை ஆராய்ந்து வருகிறோம். நாடு முழுவதும் ஆண்டுக்கு 35 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வேளாண் வளர்ச்சி விகிதம் குறைவாக இருக்கிறது. ஏதோ தவறு நடக்கிறது. இதைத்தவிர்க்கவே, அறிவியல் சார்ந்த விவசாயம் என்பதை முன்னிறுத்துகிறோம். வேளாண்துறை மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. மாநில அரசுகள் போதிய முக்கியத்துவம் அளிக்கின்றன. மத்திய அரசு வேளாண்துறையில் கூடுதல் கவனம் செலுத்துகிறது. வேளாண்துறையின் வளர்ச்சி விகிதம் இலக்கு நான்கு சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
இதை நிச்சயம் எட்டுவோம். 10ம் ஐந்தாண்டுத்திட்டத்தில் 25 ஆயிரம் கோடி ரூபாயாக வேளாண்துறைக்கான ஒதுக்கீடு இருந்தது. 12ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டு ஒரு லட்சம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. வேளாண் நிலங்கள் குடியிருப்புகளாகவும், தொழிற்சாலைகளாகவும் மாறிவருகின்றன. வேறு வழியில்லை. குறைவான நிலத்தில் அதிகப்படியான மகசூல் பெறுவதே இச்சிக்கலுக்குத் தீர்வு. இவ்வாறு, கஸ்தூரிரங்கன் தெரிவித்தார். பேட்டியின் போது, சென்னை கால்நடைப் பல்கலை துணைவேந்தர் பிரபாகர், கோவை வேளாண்பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**கொப்பரை வரத்து அதிகரிப்பு மார்க்கெட்டில் விலை குறைவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,00:41 IST

பொள்ளாச்சி : தேங்காய் சீசன் துவங்கியுள்ளதால், கொப்பரை வரத்து அதிகரித்து, விலை சரிந்துள்ளது. காங்கேயம் மார்க்கெட்டில், கடந்த 26ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 63 ரூபாய், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 96 ரூபாய், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,300 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள் பறித்து உரித்த இளம் தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 17 ஆயிரத்து 500 ரூபாய் விலை வழங்கப்பட்டது. பொள்ளாச்சி, உடுமலை பகுதியில் இருந்து, சென்னைக்கு உணவு தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய், டன்னுக்கு 16 ஆயிரத்து 500 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டது. தோப்புகளில், விவசாயிகள் பறித்து இருப்பு

வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு, 9.50 ரூபாய், வியாபாரிகள் சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள ஒரு தேங்காய்க்கு 8.50 ரூபாய் விலை வழங்கப்பட்டது. நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 52 ரூபாய், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 85 ரூபாய், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு, 1,150 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறியதாவது: கடந்த இரு வாரங்களாக, எண்ணெய் நிறுவனங்கள் "சிண்டிகேட்' அமைத்ததால், கொப்பரை, தேங்காய் விலை குறைத்து வந்தது. தற்போது, தேங்காய் வரத்து அதிகரித்துள்ளதால், கொப்பரை உற்பத்தியும் அதிகரித்து விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம், கொப்பரை கிலோவுக்கு 70 ரூபாய், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு, 1,530 ரூபாய், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 115 ரூபாய், தேங்காய் டன்னுக்கு 22 ஆயிரத்து 500 ரூபாய் விலை கிடைத்தது. தேங்காய் வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்துள்ளது. கொப்பரை கிலோவுக்கு 18 ரூபாய், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 30 ரூபாய், தேங்காய் எண்ணெய் டின்னுக்கு 380 ரூபாய் விலை குறைந்துள்ளது. ஆகஸ்ட் மாதம் வரையிலும், தேங்காய், கொப்பரை விலை உயராது.இவ்வாறு, சங்க நிர்வாகிகள் கூறினர்.

**இளநீர் விலை உயர்ந்தது; விவசாயிகள் உற்சாகம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,23:54 IST

பல்லடம் : இளநீர் கொள்முதல் விலை காய் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் உயர்ந் துள்ளதால் பல்லடம் பகுதியில் உள்ள தென்னை விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர்.பல்லடம், சுல்தான் பேட்டை வட்டாரத்தில் தென்னை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது;10 லட்சத்துக்கும் அதிகமான தென்னை மரங்கள் காணப்படுகிறது; தென்னந்தோப்புகளில் விளையும் இளநீர் கோவை, ஒட்டன் சத்திரம், திருப்பூர், தூத்துக்குடி, மதுரை உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. கடந்த இரு மாதங்களாக தமிழகம் முழுவதும் கடும்குளிர் மற்றும் பனிபொழிவு இருந்ததால் குளிர்ச்சி, தூய்மை மற்றும் மருத்துவ குணம் கொண்ட இளநீருக்கு பொதுமக்களிடம் வரவேற்பு இல்லை; கடந்த மூன்று வாரங்களாக வெயில் அதிகரித்து வருவதால் கோடையை குளுமையாக்கும் இளநீர் விற்பனை "சூடு' பிடித்து வருகிறது. தற்போது இளநீர் விற்பனை அதிகரித்து உள்ளதால் தோப்புகளில் இளநீர் கொள் முதல் விலையை வியாபாரிகள் உயர்த்தி உள்ளனர். கடந்த இரு மாதங் களுக்கு முன் 7 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட தரமான இளநீர் காய் ஒன்றுக்கு தற்போது இரண்டு ரூபாய் உயர்த்தி 9க்கு கொள்முதல் செய்கின்றனர். சற்று அளவு குறைந்த இளநீர்8 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இளநீர் கொள்முதல் விலை உயர்வு தோப்பை பராமரிக்கும் செலவை ஈடுகட்டும் வகையில் உள்ளதால் பல்லடம், சுல்தான்பேட்டை பகுதியில் உள்ள தென்னை

விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர்; கோவை, திருப்பூர் பகுதியில் சில்லரை விலையில் இளநீர் ஒன்று 13 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனை செய்யப் படுகிறது.

**மக்காச்சோளம் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,23:54 IST

பல்லடம் : மக்காச்சோளத்திற்கு கட்டுப்படியான விலை கிடைத்து வருவதால், பல்லடம், சுல்தான் பேட்டை வட்டார விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.பல்லடம், சுல்தான்பேட்டை பகுதியில் 5,000க்கும் மேற்பட்ட கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன.கறிக்கோழிகளுக்கான தீவனம் தயாரிப்பில் மக்காச்சோளத்தின் பங்கு 50 முதல் 60 சதவீதம் ஆகும்; கோழிகளுக்கு தீவனம் தயாரிக்க மக்காச் சோளம் அதிகம் தேவைப்படுவதால் ஏற்பட்டுள்ள கடும் கிராக்கி காரணமாக பல்லடம்,சுல்தான் பேட்டை வட்டார விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.உள்ளூர் மக்காச்சோளம் முழுமையாக கொள்முதல் செய்தது போக மேலும்,மக்காச் சோளம் தேவைப்படுவதால் பல்லடம் பகுதியில் உள்ள கறிக்கோழி உற்பத்தியாளர்கள், பண்ணையாளர்கள் தங்களின் தேவைக்கு ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் இருந்து தினமும் லாரிகள் மூலம் 50 லோடுகள் வரை மக்காச்சோளம் கொள்முதல் செய்கின்றனர்.கடந்த இரு மாதங்களுக்கு முன்பு மக்காச் சோளம் கொள்முதல்விலை 100 கிலோ மூட்டை 900 ரூபாயாக இருந்தது. இந்த விலை விவசாயிகளுக்கு போதிய அளவு கட்டுப்படியானதாக இல்லை.இந்நிலையில், தற்போது வெளிமாநிலங்களில் இருந்து மக்காச்சோளம் வரத்து குறைவு காரணமாக ஒரு மூட்டை மக்காச்சோளத்தை 1,100 ரூபாய்க்கு விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்துவருகின்றனர். நூறு நாள் பயிரான மக்காச்சோளம் ஒரு ஏக்கர் சாகுபடி செய்து அறுவடை வரை விவசாயிகளுக்கு 16 ஆயிரம் செலவாகிறது; ஏக்கருக்கு மூன்று டன் மக்காச்சோளம் மகசூல் கிடைப்பதோடு 3,500 ரூபாய் மதிப்புள்ள மக்காச்சோளத் தட்டுக்களும் கிடைக்கின்றன.தட்டுப்பாடு காரணமாக மக்காச்சோளம் விலை இன்னும் உயர வாய்ப்புள்ளதால் பல்லடம், சுல்தான்பேட்டை விவசாயிகள் மீண்டும் மானாவாரி பயிரான மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம் காட்டுகின்றனர்.

**ஏலக்காய் விவசாயத்தில் "மணம்' விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,23:42 IST

கூடலூர் : "ஏலக்காய் உற்பத்தி அதிகரிப்புக்கு மானியம் பெற விருப்பம் உள்ள கூடலூர் விவசாயிகள், "ஸ்பைசஸ் போர்டு' அலுவலகத்தை, நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டும்' என அறிவுறுத்தப்பட்டுள்ளது.கல்பட்டா ஸ்பைசஸ் போர்டு மண்டல துணை இயக்குனர் சித்தராமப்பா வெளியிட்டுள்ள அறிக்கை:ஏலக்காய் உற்பத்தியை அதிகரிக்க, ஸ்பைசஸ் போர்டின் மானியத் திட்டங்கள், விவசாயிகளுக்கு, நேரடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மானியம் பெற்றுத் திருவதாக, ஏஜென்ட்கள் சிலர், மோசடி செய்து வருவதாக தெரியவந்துள்ளது. மானியத் திட்ட விண்ணப்பங்களை பெற, கள ஆய்வு மேற்கொள்ள, மானியம் பெற்றுத் தர, போர்டு சார்பில் எந்த இடைத்தரகர்களையும் நியமிக்கவில்லை. விபரம் தெரிந்து கொள்ள, கல்பட்டா ஸ்பைசஸ் போர்டு கள அலுவலக தொலைபேசி (04936- 202605), மண்டல அலுவலகம் (04936-205680) கொச்சின் ஸ்பைசஸ் போர்டு இயக்குனரை (0484- 2340965, 2339942) தொடர்பு கொண்டு தெரிந்துக் கொள்ளலாம். இவ்வாறு, சித்தராமப்பா கூறியுள்ளார்.

**வாடிய முகங்களுடன் நீலகிரி கொய்மலர் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2011,00:47 IST

ஊட்டி : தேயிலை விலை வீழ்ச்சியின் போது, நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப்பயிர் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மலர் சாகுபடி, நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்து வருகிறது. இதனால் கொய்மலர் சாகுபடி செய்த விவசாயிகள், வேதனையில் உள்ளனர். நீலகிரி மாவட்ட விவசாயிகள் தேயிலை, காய்கறி விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த 10 ஆண்டுகளாக தேயிலைக்கு ஏற்பட்ட விலை வீழ்ச்சியால் பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டது. அந்த நேரத்தில் மாற்று பயிர் திட்டத்தில் கொய்மலர் சாகுபடி செய்ய தோட்டக் கலைத்துறை மூலமாக அப்போதைய அ.தி.மு.க., அரசு அறிவுறுத்தியது. இதற்கு மத்திய அரசும் உதவியது. இதனால், 500 ஏக்கர் முதல் 750 ஏக்கர் வரையிலான பரப்பில் மலர் சாகுபடி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொய்மலர் சாகுபடி செய்ய அதிகம் முதலீடு செய்ய வேண்டிய காரணத்தினால், சிறு விவசாயிகள் வங்கி கடன் பெற்று பசுமை குடிலில் சாகுபடி செய்தனர். துவக்கத்தில் நல்ல பயன் கிடைத்தாலும், ஓராண்டுடிலேயே பாதிப்பு ஏற்பட துவங்கியது. மலர் நாற்று கம்பெனிகள் கொடுத்த நாற்றுக்கள் தரமற்றவையாக இருந்ததால், மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக மலர வேண்டிய நாற்றுகள் ஒரு

ஆண்டிலேயே அழுகி வருகின்றன. இதை நிவர்த்தி செய்யும் நிரந்தர நடவடிக்கைகள் தோட்டக்கலைத்துறை சார்பில் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த சூழ்நிலையில், நீலகிரியில் அடிக்கடி வரும் இயற்கை சீற்றத்தினாலும், மாவட்டத்தில் அதிகம் காற்று வீசுவதாலும், பசுமை குடில்கள் சேதமடைகின்றன. சரி செய்ய அதிக பணம் செலவு ஆவதால், சிறு விவசாயிகளால் முடிவதில்லை. சமீப காலமாக உலக வெப்பமயமாவதால் பசுமை குடிலுக்குள் வெப்பம் அதிகமாகி, நாற்றுகள் பாதிப்பதுடன் பசுமை குடிலுக்குள் வேலை செய்ய முடிவதில்லை. இந்த குடில்களுக்குள் உள்ள நாற்றுகளுக்கு வரும் நோய்களை எந்தவிதமான மருந்துகளாலும் கட்டுப்படுத்த முடிவதில்லை. ஆரம்பத்தில் பசுமைக்குடில் அமைத்தபோது இருந்த மருந்துகளின் விலை இப்போது நான்கு மடங்காக அதிகரித்து விட்டது. இதையும் தாண்டி விவசாயிகள் உற்பத்தி செய்யும் மலருக்கு உள்ளூரில் சந்தை வசதி இல்லை. ஊட்டியில் அரசு சார்பில் அமைக்கப்பட்ட ஏல மையமும் மூடப்பட்டு விட்டது. இதனால், மலர்களை நல்ல விலைக்கு சந்தைப்படுத்த முடிவதில்லை. பூக்களை வெளி மாநிலங்களுக்கு அனுப்பும்போது விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. சில ஏஜென்டுகளால் ஏமாற்றப்படும் நிலையும் ஏற்படுகிறது. இத்தகைய காரணங்களால், நீலகிரி மாவட்டத்தில் கொய்மலர் சாகுபடி விவசாயம் தொடர்ந்து நஷ்டத்தை சந்தித்து வருகிறது. இதன் எதிரொலி வரும் சட்டசபை தேர்தலின் போது எதிரொலிக்கும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்க தலைவர் விஸ்வநாதன் கூறுகையில்,"" நீலகிரியில் மலர் சாகுபடி விவசாயிகள் கடந்த 3 ஆண்டுகளாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளோம். ஒரு சிலர் மட்டும் சில தோட்டக்கலை அலுவலர்களின் ஆதரவில், அடிக்கடி வங்கி கடன் பெற்று இந்த சாகுபடியை செய்து வருகின்றனர். பெரும்பாலான விவசாயிகள் மிகவும் கஷ்டத்தில் உள்ளனர். மத்திய அரசு இதன் உண்மை நிலையை நேரடியாக வந்து கண்டறிந்து எங்கள் கடனை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பாதிப்பு சட்டசபை தேர்தலில் நிச்சயம் பிரதிபலிக்கும். அ.தி.மு.க., ஆட்சி காலத்தில், மலர் சாகுபடியை அறிமுகப்படுத்திய முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கோடநாடுக்கு வந்தால், அவரை நேரில் சந்தித்து மனு அளிக்கவும் முடிவு செய்துள்ளோம்," என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இந்தியாவில், அரிசிக்கான தேவை 8.45 கோடி டன்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

இந்தியாவில், நடப்பு 2010–11 சந்தைப்படுத்துதல் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) அரிசிக்கான தேவைப்பாடு 8.45 கோடி டன்னாக இருக்கும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. எதிர்வரும் கோதுமை சந்தைப்படுத்துதல் பருவத்தில் (ஏப்ரல்–மார்ச்) தேவை 9.60 கோடி டன்னாக இருக்கும் என்று தெரிகிறது.

நம் நாட்டில் அரிசி மற்றும் கோதுமை கையிருப்பு அதிகமான அளவில் உள்ளது. நடப்பு மார்ச் மாத இறுதியில் கோதுமை இருப்பு 1.40 கோடி டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, கையிருப்பு விதிமுறை அளவுக்கு (70 லட்சம் டன்) இரண்டு மடங்கு அதிகமாகும். இதே போன்று, நடப்பு ஆண்டு செப்டம்பர் மாதம் 30–ந் தேதி அன்று, அரிசி கையிருப்பு 2.16 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, விதிமுறை அளவுக்கு (72 லட்சம் டன்) மேல் மூன்று மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி 19–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டின் உணவுப் பணவீக்கம் 10.39 சதவீதமாக உள்ளது. எனவே தற்சமயம் கோதுமை மற்றும் அரிசி மீதான ஏற்றுமதி தடையை இந்திய அரசு நீக்குவதற்கு வாய்ப்பில்லை என அமெரிக்க வேளாண் துறை அண்மைக் கால ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.